| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | மாவட்டம் : | **திண்டுக்கல்** | காலம் : | **19/06/2024** | முதல் | **23/06/2024** |
| | அறிக்கை எண் : | **049/ 2024** | வெளியீட்டு நாள் : | **18/06/2024** | | |

## திண்டுக்கல் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 38°-40° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 26°-27° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (13.06.2024 **முதல்** 17.06.2024) | | | | | | **அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 23-06-2024- 08.30 வரை** | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 13/06 | 14/06 | 15/06 | 16/06 | 17/06 | **தேதி** | **நாள்-1** 19/06 | **நாள்-2** 20/06 | **நாள்-3** 21/06 | **நாள்-4** 22/06 | **நாள்-5** 23/06 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.4 | மழை (மி.மீ) | 8 | 5 | 3 | 5 | 25 |
| 39 | 38 | 38 | 40 | 39 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 39 | 38 | 37 | 37 | 36 |
| 26 | 26 | 26 | 27 | 27 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 25 | 24 | 23 | 23 | 22 |
| 5 | 5 | 5 | 5 | 4 | மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 7 | 7 | 8 | 8 |
| 69 | 65 | 64 | 58 | 65 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 70 | 80 |
| 46 | 49 | 39 | 58 | 51 | | 50 | 40 | 40 | 50 | 70 |
| 6 | 8 | 9 | 18 | 9 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 20 | 18 | 20 | 18 | 16 |
| வட மேற்கு | தென் கிழக்கு | வட மேற்கு | வட கிழக்கு | தெற்கு | காற்றின் திசை | **தென் மேற்கு** | **மேற்கு** | **மேற்கு** | **மேற்கு** | **தென் மேற்கு** |

### குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் அடுத்த 5 நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 36°-39° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 22°-25° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 16 முதல் 20 கி.மீ வேகத்தில், தென்மேற்கு மற்றும் மேற்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

### பொது ஆலோசனை:

**அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு (21 - 27 ஜூன் 2024):**

### மழைப்பொழிவு :

21-06-2024 - 27-06-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் குறைவான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

**அதிகபட்ச வெப்பநிலை :**

21-06-2024 - 27-6-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொருத்தமட்டில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும். 28° செல்சியஸ் முதல் 34° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

21-06-2024 - 27-6-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும். 24° செல்சியஸ் முதல் 28° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜூன் 23 தேதி கன மழை பெய்ய வாய்ப்பு. விவசாயிகள் துரிதமாக செயல்பட்டு நீர் வரத்து வாய்க்கால்கள், பண்ணைக்குட்டைகள் மற்றும் நீர்நிலைகளை சரி செய்து மழைநீர் சேகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும். இந்த காலகட்டத்தில், உரமிடுதல் மற்றும் பூச்சிமருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்தி வைக்கும்படியும், விளைநிலங்களில் மழைநீர் தேங்கி பயிர்களை சேதப்படுத்தாத அளவில் தேவையான வடிகால் வசதிகளை ஏற்படுத்தி கொள்ளும்படியும், கால்நடைகளை மேய்ச்சலுக்கு வெளியில் அனுப்பாமலும், மின்கம்பம் மற்றும் மரங்களில் கட்டாமலும் பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கும்படியும் கேட்டுகொள்ளப் படுகிறார்கள்.

அடுத்த 5 நாட்களுக்கு மணிக்கு 16 முதல் 20 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் கரும்பு, வாழை, பப்பாளி, கொய்யா, முருங்கை போன்ற பயிர்களுக்கு மண் அனைத்தல், முட்டுகொடுத்தல், விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்க்கொள்ளவும். கொடிவகை பயிர்களில் பந்தல்களில் துருபிடித்து பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்திவைக்கவும்.

**விவசாயம் :**

இந்த பட்டத்தில் காய்கறி சாகுபடி செய்ய திட்டமிடும் விவசாயிகள் விதைப்பதற்கு முன்பு ஒரு ஏக்கருக்கு 200 கிலோ நன்கு மக்கிய தொழு உரத்துடன் தலா 1 கிலோ டிரைக்கோடெர்மா விரிடி மற்றும் சூடோமோனாஸ் கலந்து நிலப்பரப்பில் இடவும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : தக்காளி, நிலக்கடலை, கால்நடை.**

**தக்காளி:**

தக்காளி பயிரில் இலை சுருட்டை நோய் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. நோய் தாக்குதலின் அறிகுறியாக புதிதாக வளரும் தக்காளி செடியில் மஞ்சள் நிறத்தில் இலைகள் சுருண்டு காணப்படும். தாவரத்தின் வளர்ச்சி குறைந்துவிடும்.

புதிய இலைகளின் அளவு குறைந்து சுருங்கி, நரம்புகள் மஞ்சள் நிறத்தில் மாறியும் காணப்படும். இலைகள் மேல் நோக்கி சுருண்டு பார்ப்பதற்கு கிண்ணம் போல் இருக்கும்.

மலர்கள் தோன்றும் ஆனால் காய் பிடிப்பதற்கு முன் உதிர்ந்துவிடும்.

இதனைக் கட்டுப்படுத்த 10 லிட்டர் தண்ணீரக்கு 40 கிராம் சூடோமோனஸ், 250 மில்லி நன்கு புளித்த தயிர், மற்றும் 2 கோழி முட்டைகளின் வெள்ளைக்கரு என்ற விகித்தில் எடுத்துக் நன்கு கலந்து தெளிக்கவும்.

**நிலக்கடலை:**

ஜூன் மாதமானது நிலக்கடலை விதைப்பிற்கு ஏற்ற காலமாகும். நிலக்கடலையை ஜுன் மாதத்தில் விதைப்பதன் மூலம் அதிக மகசூல் பெறலாம்.

நிலக்கடலையில் விதைநேர்த்தி செய்தல் நல்ல பயனளிக்கும். நிலக்கடலையில் விதை நேர்த்தி செய்ய ஒரு கிலோ விதையுடன் 10 கிராம் டிரைகோடெர்மா விரிடியைக் கலக்கவும். இதை விதைக்கும் முன் (சற்று முன்னர்) செய்ய வேண்டும். இது உயிர் உரங்களுடன் கலக்க ஏதுவானது.

இவ்வாறு நேர்ததி செய்யப்பட்ட விதைகளை பூஞ்சாணக் கொல்லிகளுடன் கலக்கக்கூடாது.

விதைநேர்த்தி செய்யாமல் விதைத்தவர்கள் எக்டேருக்கு 2 கிலோ ரைசோபியம் மற்றும் 2 கிலோ பாஸ்போபாக்டீரியா உடன் 25கிலோ மக்கிய தொழுஉரத்துடன் 25கிலோ மணல் கலந்து இடவேண்டும்.

**கால்நடை:**

தற்போது நிலவும் பருவச்சூழலில் மாடுகளில் சப்பை நோய்; தாக்குதலுக்கான வாய்ப்புகள் உள்ளது. இந்நோய் காற்றின் ஈரப்பதம் கூடுதலாகவும் உள்ள பகுதிகளிலுள்ள மாடுகளைப் பெரும்பாலும் பாதிக்கிறது. இதுவும் ஓர் மழைக்கால நோயாகும். நல்ல ஆரோக்கியமான திடமான இளம் மாடுகளை 6 மாத வயது முதல் 3 ஆண்டு வயது வரை அதிகம் பாதிக்கிறது.

தொடை அல்லது முன்கால் சப்பை அல்லது கழுத்து போன்ற சதைப்பிடிப்புள்ள பகுதிகளில் வெப்பம் மிகுதியாகவும் வலியோடு கடினமான தன்மையுள்ள பெருத்த வீக்கமும் காணப்படும் தோலின் நிறம் கருப்பாக இருக்கும். இதன் காரணமாக மாடுகள் நடக்க முடியாமல் நொண்டும்.

நோய் அறிகுறிகள் தென்பட்டவுடன் மாட்டைப் தனியாக பிரித்துத் ஒதுக்குப்புறமாக வைத்துக் கண்காணிக்க வேண்டும்.

நோய்க் கண்ட 24 மணி நேரத்திற்க்குள் உடனடியாக கால்நடை மருத்துவரின் உதவியுடன் மருத்துவம் செய்ய வேண்டும் இல்லையேல் மாடுகள் இறந்து விடும். ஒவ்வொரு ஆண்டும் மழைக்காலத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்பே மாடுகளுக்குத் தடுப்பூசி போடுதல் அவசியம்.

.